**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No. 58 of 2020 |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution : | PW- 5 |
| | : | Defence : | |
| | | Court : | |

| | |
|---|---|
| Name | : Illayaraja |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of November 2022.**

முதல் விசாரணை :

நான் அரூர் தாலுக்கா எஸ்.பட்டியில் குடியருந்து வருகிறேன். 2018ம் ஆண்டு முதல் வெப்பாலம்பட்டி அரசு மதுபானக்கடையில் விற்பனையாளராக பணி செய்து வந்தேன். என்னுடன் ஆனந்தன், கோவிந்தராஜ், முருகன் ஆகியோர் விற்பனையாளராகவும், மேற்பார்வையாளராக சுபாஷ் என்பவரும் உதவி மேற்பார்வையாளராக சிவகுமார் என்பவரும் உள்ளனர். 15.12.2018ல் நான் எனது வீட்டில் இருந்தேன். அனுமந்தீர்த்தத்தை சேர்ந்த முன்னால் தலைவர் மாரியப்பன் என்பவர் எனக்கு இரவு 11.15 மணியளவில் என கூறிவிட்டு சாட்சி மீண்டும் 10.15 மணியளவில் போன் செய்தார். ஆனந்தன் மற்றும் முருகனை துப்பாக்கியால் வித்தியா மந்தீர் மாணவர் விடுதி பக்கம் சுட்டுவிட்டு பணத்தை கொள்ளையடித்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் வந்துவிடுவதாக சொல்லிவிட்டுஇருசக்கர வாகனத்தில் கல்லூரி விடுதி அருகே சென்றபோது மருத்துவமனக்கு அழைத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். பின்பு நான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு வந்தேன். ஆனந்தன் மற்றும முருகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தனர். நான் பார்க்கும்போது ஆனந்தனுக்கு வலது கை அக்குள் மற்றும் விலா எலும்பு பகுதியில் காயம் இருந்தது. முருகனுக்கு வலது காதில் காயம் இருந்தது. அவருக்கு காதில் கட்டு போட்டிருந்தனர். அவரை மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு சொன்னார்கள். அவர்களுடன் நானும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் சென்றோம். நான் ஆம்புலன்ஸில் செல்லும் வழியில் கோவிந்தராஜிற்கு தகவல் கொடுத்தேன். தருமபுரி மருத்துவமனையில் முருகனிடம் ஊத்தங்கரை போலீசார் வாக்குமூலம் வாங்கினார். காலை 6.30 மணியளவில் ஊத்தங்கரை போலீசாரிடம் முருகன் அவர் அணிந்திருந்த வெள்ளை முழு கைச்சட்டை அதில் நீல நிறத்தில் கட்டம் இருந்தது. ஆனந்தன் அவர் அணிந்திருந்த கருநீலம் நிறமுடைய டி-சர்ட் மற்றும் முண்டா பனியன் ரத்த கரையுடன் உள்ளதை ஆஜர் செய்தார். அதை போலீசார் பெற்றுக்கொண்டனர். அது சம்மந்தமாக தயார் செய்த ஆவணத்தில் நானும், கோவிந்தராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம். <u>அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான்.</u> அதன் பிறகு நான் கடைக்கு வந்துவிட்டேன். டாஸ்மாக் மேலாளர் கடைக்கு வந்து ஆய்வு செய்தார் அவ்வாறு ஆய்வு செய்தபோது நானும், கோவிந்தராஜும் உடனிருந்தோம் கடையின் மேற்பார்வையாளர் சுபாஷ் என்பவரும் உடனிருந்தார். ஆய்வின்போது ரூ.2,90,830/- குறைவு இருப்பதாக கடையிருப்பின் அடிப்படையில் கண்டறியப்பட்டது. இது தொடர்பாக மேலாளர் தயார் செய்த அறிக்கையில் நான், சுபாஷ் மற்றும் கோவிந்தராஜ் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். ஆய்வில் குறைவு என கண்டறியப்பட்ட தொகையானது. சம்பவத்தில் கொள்ளை போன தொகையின் மதிப்பாகும். முருகன் அணிந்திருந்த முழுக்கை சட்டை தான் என்னிடம் காண்பிக்கபடுவது. அது சா.பொ.4.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் 1 மற்றும் 2 தரப்பில்:</u>

மதுபானக்கடை பகல் 12.00 மணிக்கு திறப்போம் இரவு 10.00 மணிக்கு மூடிவிடுவோம். வழக்கமாக அந்தக்கடையில் 3 விற்பனையாளர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். 3 விற்பனையாளர்களும் கடை முடிந்த பிறகு விறப்பனை தொகையை எடுத்துச்செல்வது வழக்கம் என்றால் சரிதான். மூவரும் தனித்தனி இருசக்கர வாகனத்தில் செல்வார்கள். வழக்கமாக ஓவ்வொரு நாளும் தனித்தனியாகநத் தான் செல்வார்கள் என்றால் சரிதான். கடை முடிந்த பிறகு விற்பனை தொகையை சரிப்பார்த்து எடுத்து சொல்வோமா அல்லது சரிப்பார்க்காமல் அப்படியே எடுத்து செல்வோமா என்றால் இரவு சரிப்பார்க்கமாட்டோம் விற்பனை தொகையை அப்படியே எடுத்துச்செல்வோம். சம்பவ தினத்தன்று பணம், சாவி, சிட்டா, பில்புக் ஆகயவை கொள்ளை போனதாக சொன்னார்கள். சம்பவம் நடைபெற்ற அன்று கடை தொடர்புடைய ஆவணங்களும் முருகன் எடுத்து

வந்தபோது தான் சம்பவம் நடைபெற்றது. அடுத்த நாள் பகல் 12.00 மணிக்கு மேலாளர் உதவியுடன் 12.00 மணிக்கு கடை திறந்தோம். கடை சாவி எங்களிடம் இல்லை அதிகாரி வாய்மோழியாக சொன்னதன் பேரில் பூட்டை உடைத்து கடை திறந்தோம். போலீசார் விசாரணையில் கடை சாவியில்லை என்றும் பூட்டை உடைத்து திறந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பில் ரசீது இருந்ததா தான் கொள்ளை போன பணத்தின் மதிப்பை சரியாக குறிப்பிட முடியுமென்றால் இருப்பு பதிவேட்டின் அடிப்படையிலும் அந்த தொகையின் மதிப்பை கணக்கிடலாம். நானும் உதவி மேலாயரும் சொன்ன பிறகு தான் போலீசாருக்கு எவ்வளவு தொகை கொள்ளை போனது என்ற விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். நாங்கள் கொள்ளை போன தொகையின் மதிப்பை கணக்கீடு செய்த அடுத்த நாள் மாலை அன்றே போலீசாருக்கு அந்த விவரம் தெரவித்துவிட்டோம். ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில் நான் ஆனந்தனை பார்த்தபோது அவர் கால் சட்டை அணிந்திருந்தார். ஆனந்தன் அவர் அணிந்திருந்த டி-சர்ட் மற்றும வெள்ளை பனியனை கழட்டி வைத்திருந்தார். ஆம்புலன்ஸில் தருமபுரி மருத்துவமணைக்கு செல்லும் வழியில் எங்களுக்கு பின்னால் ஊததங்கரை போலீசார் ஜீப்பில் தொடர்ந்து வந்தனரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தருமபுரி மருத்துவமணைக்கு போலீசார் இரவு 1.00 மணிக்கு வந்திருப்பார். நாங்கள் மருத்துவமணையில் சேர்ந்து அரை மணி நேரத்திர்குள்ளாக போலீசார் அங்கு வந்தார். ஆனந்தன் தருமபுர் மருத்துவமணையில் மயக்க நிலையில் இல்லை அவர் தெளிவாகத்தான் இருந்தார். முருகனும் தெளிவாகத்தான் இருந்தார். ஆனந்தனின் துணி மணிகளையும் சேர்த்து முருகன் தான் போலீசாரிடம் ஒப்படைத்தார். ஆனந்தனிடம் போலீசார் விசாரிக்கவில்லையா என்றால் அவர் சேலம் அரசு மருத்துவமணைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனந்தனின் டி-சர்ட்டில் வலது கை அக்குள் பகுதி ஓட்டை இருந்தது. ஆனந்தனின் வலது கை மேல் பகுதியிலும், அக்குள் பகுதிலும் கட்டுப்போடப்பட்டிருந்தது. முருகன் சொன்னதன் பேரில் தான் அது ஆனந்தனின் துணிகள் என போலீசாருக்கு மற்றும் எனக்கும் தெரிய வந்தது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் மகஜரில் காலை 6.30 மணியளவில் கையொப்பம் பெற்றனர். மகஜரில் என்ன விவரம் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் என் முன்பாகவும், கோவிந்தராஜ் முன்பாகவும் துணிமணிகளை கைப்பற்றியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. முருகன் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

**3**ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**